**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.**

**CC.No. 352/2022**

2026ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 11ஆம் நாள் செவ்வாய் கிழமை அரசு தரப்பு சாட்சி–05, திருமதி.வாசுகி என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் பிரமாணச் சட்டம் பிரிவு 4ன்படி) திரு.செ.சாஸ்தா குமரன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.வாசுகி | வயது | : | 50/26 |
| க.பெ. | : | மனோகரன் | தொழில் | : | விவசாயம் |
| ஊர் | : | பிச்சனூர் | நிலை | : | LW05 / PW05 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

**( எதிரி ஆஜர் )**

**முதல் விசாரணை:**

நான் பிச்சனூரில் வசித்து, விவசாயம் செய்து வருகிறேன். நான் கடந்த 24.09.2022ம் தேதி இரவு சுமார் 07.30 மணியளவில், எனது சின்ன மாமியாரின் கரும காரியத்திற்காக வந்தபோது, சுதா என்பவரது வீட்டிற்கு முன்பு திருநாவுக்கரசுக்கும் சுதாவுக்கும் இடையே தகராறு நடந்தது. அப்போது அங்கிருந்தவர்கள் சண்டையை விலக்கிக்கொண்டிருந்தார்கள். சுதா மயக்கம் போட்டு விழுந்தார். அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் நான் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன்.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் கு/வி.**

அ.சா.1 மற்றும் ஆஜர் எதிரியைத் தெரியும். அவர்கள் என் ஊர்க்காரர்கள் ஆவார்கள். போலீசார் விசாரணையில், கடந்த 24.09.2022 ம் தேதி இரவு 07.00 மணியளவில், எதிரி திருநாவுக்கரசு அறிவழகன் இடத்தில் கம்பி வேலி போட்டார் என்றும், அ.சா.1 சுதா எதற்காக என் புருஷன் இல்லாத நேரத்தில்கம்பி வேலி போடுகிறீர்கள் என்று கேட்டபோது, எதிரி அ.சா.1 ஐ தகாத வார்த்தைகளால் திட்டி, கையால் முகத்தில் அடித்தார் என்றும், முதுகில் காலால் உதைத்து கீழே தள்ளினார் என்றும், அதனால் அ.சா.1 க்கு இடது கால் முட்டியில் காயமும் தலையிலும், முதுகிலும் அடிபட்டு, வீக்கம் ஏற்பட்டது என்றும் கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை

**மறு விசாரணை – இல்லை**

உண்மை நகல் /
ஒம்/-ப.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்.